3 ஜூன் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH **கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம்**

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



**மாதாந்திர கருப்பொருள்:**

## எடுத்து, பிட்டு, கிறிஸ்துவில் அளித்து

# நிறைவேறிய வாக்குறுதி

இஸ்ராயேல் கடவுளுடன் உடன்படிக்கையைச் செய்து கொண்ட போது மாட்டை பலியீட்டு, தமது மக்களின் மீது மாட்டு இரத்தத்தைத் தெளித்தார். தூய உள்ளத்தோடு மக்கள் அதனை கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கான வாக்குறுதி பலி. கிறிஸ்து, புதிய வாக்குறுதியாக இருக்கிறார், அவரது தெய்வீகப் பலி புதிய திருப்பேழை. இயேசு வருகையின் எதிர்பார்ப்பு அதில் அடங்கியுள்ளது. இவரே கடவுள் முன்னறிவித்த மகன், 'புதிய உடன்படிக்கையின்' மத்தியஸ்தர். மகன் வழியாக தந்தையிடம் உலக மக்களைக் கொண்டு வருபவர்.

இயேசு சிந்திய இரத்தம், பாவமன்னிப்புக்கான வாக்குறுதி. இயேசுவிற்கு முன் இம்மாதிரியான வாக்குறுதியைக் கண்டதில்லை. மிருகப்பலி உன்னதமில்லை, மெசியாவின் பலியே உன்னதம் என்பது யூதக் குருக்களுக்குச் சினத்தை ஏற்படுத்தியது. மிருக இரத்தம் கடவுளுடன் பேசுமா? நமது மீட்பரால் முடியும். மிருகம் நமக்காக பரிந்து பேசாது. மீட்பரால் முடியும். மகனிடம் அரசுரிமையுண்டு, மிருகத்திடமோ ஒன்றுமில்லை. மிருகம் பூமியைச் சார்ந்த தற்காலிகமானது. இயேசுவோ பரலோகத் தந்தையிடமிருந்து வந்தவர். அவரது பலி நிரந்தரமானது, நித்தியமானது, எக்காலத்திற்கும் எல்லாருக்குமானது.

> **'இது எனது உடல்' என கிறிஸ்துவே கூறியிருப்பதால், அவரது உடல் குறித்து ஐயம் கொள்பவர் யார்?**
>
> - புனித எருசல சிரில்

'நான் என் சீடர்களோடு பாஸ்கா விருந்து உண்பதற்கான என் அறை எங்கே?' என இயேசு கேட்கிறார். தேவையான வசதிகளோடு தயார் நிலையில் இருக்கிறது. அதே தேவையான வசதிகளோடு இன்றும் இருக்கும் இடத்தில்தான் திருப்பலி கொண்டாடப்படுகிறது, வாக்குறுதியுடன். நமது பலிக்காக கடவுள் தயாராக காத்திருக்கிறார். தலைமுறை தலைமுறையாய் இந்த அருட்சாதனம் வெற்றிக்கான ஆதாரமாகவும் உச்சமாகவும் இருக்கிறது. காரணம், கிறிஸ்துவின் பாடுகள், அவரது உடலும் இரத்தமும். சிலுவை இல்லாமல் உயிர்ப்பு இல்லை என்பதால், அது வேதனை தரும் செய்தியாகவும் இருக்கிறது. ஆயினும் உயிர்ப்பு இல்லாமல், நமக்கு வெற்றிக் கிரீடம் கிடைக்காது.

இந்த கொண்டாட்டத்தில் பங்கு கொள்பவர்கள், மற்றவர்களுக்கு உடலாகவும் இரத்தமாகவும் மாறுகின்றனர். வாழ்க்கையின் சின்ன சின்ன காரியங்களிலிருந்து பெரியதை நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார், இயேசு. 'நானே தியாகப்பலி'. அன்பு செய்ய, மன்னிப்பு வழங்க, பெருந்தன்மை வளர்க்க நம்பிக்கை தரும் நற்கருணை பலியில் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். இந்த நம்பிக்கை இரு வழியானது. தேவையான வசதிகளோடு தயார் நிலையில் இருக்கும் அறையில் ஏற்கனவே இருப்பவர்களுக்கான அருளை இயேசு உறுதிப்படுத்துகிறார். ✝

> **வாரம் ஒரு வசனம்**
>
> பெரியதை நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார், இயேசு.

INTERNAL CIRCULATION ONLY
BUL 22/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அண்ட்ரூ கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 ஜூன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*
***எடுத்து, பிட்டு கிறிஸ்துவில் கொடுங்கள்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: சனி 02 -06-2018 - ஞாயிறு 10-06-2018 வரை**
**கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா**
இ.ச: 24:3-8 தி.பா 115:12-13, 15, 16, 17-18 எபிரே:9:11-15 மாற்கு: 14:12-16, 22-26
**"மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து, ஆண்டவர் பெயரைத் தொழுதிடுவேன்." திபா 115**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 02 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/<br>திருப்பலி (பு 3ஆம் பெனடின்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge)** : மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை (படிவம் 3,4,5) |
| ஞாயிறு | 03 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (பு. ஜேம்ஸ்)<br>திருப்பலி (ஆ) (பு 4ஆம் பெனடின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ)<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

**கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா** : பகல் 3-5 வரை நற்கருணை ஆராதனை(அமைதியில்)
மாலை 5.00மணிக்கு திருப்புகழ் மாலை, ஆலய வளாகத்தை சுற்றி பவனி நடைபெறும்.
வருகை தந்து உங்கள் ஒரு மணி நேரத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து செபியுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| திங்கள் | 04 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 05 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 06 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 07 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 08 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் 10ஆம் ஞயிறு**
தொ.நூ: 3:9-15 தி.பா: 129:1-2, 3-4, 5-6, 7-8 2 கொரி: 4:13 -5:1 மாற்கு: 3: 20 - 35
**"பேரன்பும் மீட்பும் ஆண்டவரிடமே உள்ளன." திபா 129**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 09 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(பு 3ஆம் பெனடின்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge)** : மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 10 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (பு.பெட்ரிக்)<br>திருப்பலி (ஆ) (புனித கத்தெரின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ)<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 ஜூன் (வைகாசி) மாத செய்திகள்/நிகழ்வுகள்**
i) ஆலய காணிக்கை
அ) 26/27 மே 2018 ரிம: 10,800.20
ஆ)பங்கு நவநாள் (மே 23-26) காலை 10.00 மணி ரிம: 5,398.35

*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**ii)** நவநாட்களின் போது தரப்பட்ட ஒவ்வொரு மன்றாட்டுகளும் செபிக்கப்பட்டு ஒப்புக் கொடுக்கப்பட்டது. அன்னை மரியாள் நம் செபங்களுக்காக பரிந்து பேசுவாராக.

- **பங்கு மக்களுக்கு ஓர் அழைப்பு:** நம் ஆலயத்தில், மாதா செபியில் உங்களுக்கு ஏற்பட்ட அற்புத அடையாளங்களை தெரிவிக்க அழைக்கிறோம். பங்கு அலுவலகம் அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

- **பைபிள் பாடம் எஸ்.பி.எம்** தேர்வில் பங்கு கொள்ள இப்போதே தயாராகுங்கள். படிவம் 3 மாணவர்களை இந்தப் பாடத்தில் கலந்து கொள்ள அழைக்கிறோம். (வகுப்புகள் சனிக்கிழமை பகல் 2.30) தற்போது படிவம் 4 & 5 மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள்.தொடர்புக்கு. ஹெல்டன் 012-237 0982

- இந்த மாணவர்கள் ஜூன் 10 (ஞாயிறு)காலை உணவு விற்பனை செய்கிறார்கள். வாங்கி ஆதரவு தரவும்.

- **மெத்தோடிஸ்ட் பள்ளிக்காக நிதி திரட்டு - 03-06-2018** நம் மினவுதல் தேவாலய உணவு விடுதியில் காலை உணவு விற்பனை.
தொடர்புக்கு: ஸ்டீபன் 016-6110681 / 016-2681531

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிச வினருக்கும் மற்றும் திருவழிபாட்டுக் குழுவினருக்கும் நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

- **புதிய நற்கருணைப் பேழை: ( மினாங்கபாவ் கட்டிடக்கலை)** நெகிரி செம்பிலான் மாநிலத்தின் தாய் திருச்சபையாகத் திகழும் நமது ஆலயத்தில் இந்த முறையில் நற்கருணைப் பேழை அமைத்ததற்காக நாம் பெருமை கொள்கிறோம். இந்தப் பேழை மிகவும் தாராள இட வசதியோடு, ஆண்டவரோடு ஆழ்ந்து தியானம் செய்யும் வகையில் அழகுற அமைந்துள்ளது.

- **மகத்தான நன்றி:** குறிப்பாக பங்கின் 170 ஆம் ஆண்டு நிறைவு ஏற்பாட்டுக் குழுவினருக்கும், திருவழிபாட்டு குழுவினர், தன்னார்வத்தோடு உதவியவர்கள், நிதியாளர்கள் மற்றும் பங்கு மக்கள் அனைவருக்கும் உங்களுடைய மகத்தான ஆதரவு மற்றும் செபங்களுக்கு எங்களி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நவநாட்கள் / பவனி / திருவிழா கொண்டாட்டம் அனைத்தும் செப உணர்வோடும், மிக அழகாகவும் நடைபெற்றது. இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!
***அருள்திரு.ஜோர்ஜ் ஹாரிசன் & அண்ட்ரூ கூய்***

- **மரியாளின் கண்காட்சி:** 23 மே - 03 ஜூன் வரை விசிடேஷன் பார்லரில் நடைபெறுகிறது. அன்னை மரியாளின் வழியாக ஆண்டவரிடம் நெருங்கி வர சென்று காணுங்கள்.

- **மினவுதல் தேவாலய வரலாற்று நடை:** ஆலயத்தின் 170 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் விவிலிய அறையில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பங்கின் வளமான வரலாற்றை அறிந்து கொள்ள நேரம் எடுத்து வாசித்து, தெரிந்து கொள்ள முன்வாருங்கள்

- **170 ஆம் ஆண்டு வரலாற்று காஃபி டேபிள்** புத்தகம் ஒளிவட்டோடு தயாராகி உள்ளது. உங்களுடைய பதிவுக்கு : ஜெரோம்: 019-790 8071 அல்லது பங்கு அலுவலகத்தை நாடவும். ஜூன் 1 முதல் GST வரி விலக்கிக்கொள்ளப்பட்டதால் அதிக செலவுகள் குறைக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு வாரத்தில் விநியோகிக்கப்பட்டு விடும். தாமதத்திற்கு வருந்துகிறோம்.உங்களுடைய ஆதரவுக்கு நன்றி (170 ஆம் ஆண்டு நினைவுப்புத்தக குழுவினர்)

- **உறுதிப்பூசுதல் அருளடையாளக் கொண்டாட்டம்:** ஜூலை 21 , சனிக்கிழமை மாலை 6.00 மணி. அனைத்து உறுதிப்பூசுதல் மாணவர்களும் அதிச/பங்குப் பணிக்குழுக்களில் இணைந்து பணி செய்ய அழைக்கிறோம். கடந்த வாரம் நடைபெற்ற உறுதிப்பூசுதல் முகாமில் உதவி செய்த பெற்றோர் /மறைக்கல்வி ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

- **பங்கு குருக்களின் விடுமுறை:** அருள்திரு. அண்ட்ரூ கூய் ஜூன் 4- 8 வரை விடுமுறையில் இருப்பார் அருள்திரு. ஜோர்ஜ் ஹாரிசன் ஆல்ஃபா மாநாட்டுக்காக ,ஹாலிபேக்ஸ்,கனடா செல்கிறார்.ஜூன் 8-16 வரை
- **குருக்களின் மாதாந்திர தியானம்**; 19 & 20 ஜூன் 2018,
- **அதிச ஒருங்கிணைப்பாளர்குழு கூட்டம்:**27-06-2018
- **மார்ஜெரி திரு இருதய ஆண்டவர் திருவிழா** ஜூன் 22-24 , 2018